03.09.2025

**அ.வ.எண். 1071/2017 C/w.8/2021 and C/W.160/2021**

**பி.சா.2 - கோவிந்தசாமி த/பெ. கிருஷ்ணசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 03.09.2025 is accordance with the provision of Act X of 3331

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. அசல் வழக்கு எண்.8/2021 மற்றும் 160/2021 வழக்குக்கு அ.வ.எண்.1071/2017 ல் விசாரணை நடைபெறுகிறது என்றால் நான் அ.வ.எண்.8/2021 மற்றும் 160/2021 சம்மந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். மூன்று வழக்குகளிலும் வாதிகள் 1. மனோகரன் 2. துளசிமணி 3. கௌரி பிரகாஷ், 4. பிரியா, 5. பிருந்தா ஆகியோர்கள் தான் வாதிகள் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் யார் சொல்லி எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தார். வழக்கறிஞரின் பெயர் செந்தில் இளங்கோவன்.

2. மூன்று வழக்குகளின் பரிகாரம் எனக்கு தெரியுமா என்றால் அ.வ.எண்.8/2021 ன் பரிகாரம் மட்டுமே தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் நினைவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் சக்திகுமார் (எ) விஜயராகவன் சொல்லி தான் தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் மாரப்ப கவுண்டர் சொல்லி தெரியும். சக்திகுமார் (எ) விஜயராகவன் சொல்லி தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி சரஸ்வதியின் மகள் பெயர் பூங்கொடி என்றால் இல்லை, பூமணி ஆவார். பூமணி எனது மனைவி ஆவார், 2ம் பிரதிவாதி எனது மாமியார் ஆவார்.

3. 2ம் பிரதிவாதிக்காக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் தனபால் இறந்துவிட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தனபாலின் வாரிசுகளுக்காக நான் சாட்சியம் அளிப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1998 ம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு முன்பாக இந்த வழக்கின் வாதி

மற்றும் பிரதிவாதிகளை தெரியாது என்றால் தெரியும். உபயவாதிகள் அனைவரும் எனது நெருங்கிய உறவினர்கள் அல்ல என்றால் சரியல்ல. உபயவாதிகள் எனது ரத்த சம்பந்த உறவு இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கருமத்தம்பட்டி கிராமம் செகுதங்காளி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு க.ச.எண்.614/1E ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 15.99 ½ சென்ட் இருந்தது என வருவாய்துறை ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.614/1 என்பது க.ச.எண்.614/1A, க.ச.எண்.614/1B. க.ச.எண்.614/1C. க.ச.எண்.614/1D., க.ச.எண்.614/1E என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் க.ச.எண்.614/1E உட்பிரிவு செய்யப்பட்டது பற்றி தெரியும். க.ச.எண்.614/1 ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 15.99 ½ சென்ட் ல் ஆதியில் சக்கரைத்தேவன், சபரிதேவன், அந்தோணிதேவன், சவுந்தராதேவன் என்பவர்களுக்கு பாத்தியப்பட்டது என்ற விவரத்தினை எனது முதல் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. ஏக்கர் 15.99 ½ சென்ட்யை நான்கு பகுதிகளாக பிரித்து ஏக்கர் 3.99 ½ சென்ட், மற்றும் ஏக்கர் 3.99 ¾ சென்ட் என பிரித்து பத்திரங்கள் ஏற்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஏக்கர் 3.99 ½ சென்ட் புல எண்.614/1E ல் ஏற்பட்டது பற்றி தெரியும். புல எண்.614/1 ல் ஏக்கர் 15.99 ½ சென்ட் பூமியில் ¼ பங்கு பூமியான ஏக்கர் 3.99 ¾ சென்ட் பூமியினை 03.02.1914 ம் வருட கிரய பத்திர எண்.373/1914 என்ற கிரய பத்திரப்படி சின்னப்தேவர் மகன் சக்கரைத்தேவன், ராக்கியகவுண்டர் மற்றும் பெரியகவுண்டர் மகன் பெரிய மாரப்ப கவுண்டர் ஆகியோர்களுக்கு மேற்படி பூமியினை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை.

6. 30.03.2014 ம் தேதி பத்திர எண்.1069/1914 என்ற பத்திரப்படி சின்னப்பதேவர் மகன் சுகுந்தாதேவன், ராக்கியகவுண்டர் மற்றும் பெரியகவுண்டர் மகன் பெரிய மாரப்ப கவுண்டர் ஆகியோர்களுக்கு க.ச.எண்.614/1 ல் உள்ள ஏக்கர் 15.99

½ சென்ட், ¼ பங்கு பூமியில், ஏக்கர் 3.99 ½ சென்ட் பூமியை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. 06.10.1914 தேதியில் 3810/1914 என்ற கிரய பத்திரப்படி சின்னப்பதேவர் மகன் சவரிமுத்துதேவன், மற்றும் அவரது மகன் சந்தோஷ்தேவர் ஆகியோர்கள், பெரியாக்கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டருக்கு க.ச.எண்.614/1 உள்ள ஏக்கர் 15.99 ½ சென்ட், ¼ பங்கு பூமியில், ஏக்கர் 3.99 ½ சென்ட் பூமியை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது.

7. புல எண்.614/1 ல் உள்ள ஏக்கர் 15.99 ½ சென்ட், ¼ பங்கு பூமியாக பிரிக்கப்பட்ட பின் யார் யார் எந்த ஆவணத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வந்தார்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் வாதியின் தகப்பனார் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் தகப்பனார் பெயர் பெரிய மாரப்ப கவுண்டர் என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டருக்கு 1. ராமசாமி என்ற மகனும் 2. கருணையம்மாள் மற்றும் 3. ரங்காத்தாள் என்கிற மகள்களும் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

8. ராமசாமி கவுண்டரின் தகப்பனார் பெரிய மாரப்ப கவுண்டருக்கு 1914 ம் வருடத்திய கிரய பத்திரப்படி ராக்கிய கவுண்டருடன் கூட்டாக சேர்ந்து ஏக்கர் 15.99 ½ சென்ட் பூமியில் ஏக்கர் 7.99 ½ சென்ட் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. ராமசாமி கவுண்டரின் தகப்பனார் பெரிய மாரப்ப கவுண்டருக்கு ஏக்கர் 15.99 ½ சென்ட் பூமியில் அவருக்கு ஏக்கர் 3.99 ½ சென்ட் பாத்தியம் என்றால் நினைவில்லை. ராக்கிய கவுண்டருக்கு ஏக்கர் 3.99 ½ சென்ட் பாத்தியம் என்றால் தெரியாது. ஏக்கர் 15.99 ½ சென்ட் பூமியில் ராக்கிய கவுண்டருக்கும், பெரிய மாரப்ப கவுண்டருக்கும் ஏக்கர் 7.99 ½ சென்ட் பாத்தியப்பட்டது என்றும், மீதமுள்ள பூமியானது அந்தோணிதேவர் வசமிருந்தது என்றால் தெரியாது.

9. பெரிய மாரப்ப கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஏக்கா 7.99 ½ சென்ட்யையும், வாரிசுரிமை படியும், அனுபவப்படியும் ராமசாமி கவுண்டர் தான் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் தெரியாது. அது ராமசாமி கவுண்டரின் பரம்பரை சொத்து என்றால் தெரியாது.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur